**D.V.O.P. 1/2017** **06.07.2019**

**எ.ம.சா.1. ஜெயபால்**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

முதல் குழந்தை பிறந்த பிறகு மனுதாரர் அவராகவே வீட்டிற்கு வந்துவிட்டார் என்றால் இல்லை நான் போய் அழைத்து வந்தேன். முதல் குழந்தை பிறந்த சமயத்தில் காய்ச்சி ஊற்ற செல்லும்போது என்னை தடுத்துவிட்டார்கள் என்று சொன்னவகையில் யார் யார் சென்றோம் என்றால் நான், எனது அம்மா, அப்பா, 2 அக்கா, ஒரு தங்கை, 3 மாமாக்கள் ஆகியோர்கள் சென்றோம். மேற்படி நபர்களை மேற்படி சம்பவம் குறித்து சாட்சி சொல்ல சாட்சியாக விசாரிக்க முடியுமா என்றால் முடியும். மேற்படி விபரத்தை எனது எதிர்மனுவில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். காய்ச்சி ஊற்றுவதற்கு எங்கள் குடும்பத்திலிருந்து யாரும் செல்லவில்லை என்றும் பெண் குழந்தை பிறந்த காரணத்தினால் எங்கள் குடும்பத்தில் கோபமாக இருந்தார்கள் என்றும் மனுதாரர் தானே தான் குழந்தையுடன் வீட்டிற்கு வந்தார் என்றால் சரியல்ல. குழந்தையுடன் மனுதாரர் வீட்டிற்கு வந்தபோது கணவர் என்ற முறையில் நான் மனுதாரருக்கும் குழந்தைக்கும் உரிய கடமைகளை செய்தேனா என்றால் செய்தேன். அதன்பிறகு 5 வருடங்கள் கழித்து மனுதாரர் 2வது முறை கருவுற்றார். 5 வருட காலகட்டத்தில் தான் நான் வேன் வைத்து ஓட்டி வந்தேன் என்றால் சரிதான். மேற்படி காலகட்டத்தில் மனுதாரரின் பெற்றோர்கள் எங்கள் உறவினர்களிடம் வரவுசெலவு வைத்திருந்தார்கள் என்றும் மேற்படி தொகைகளை வசூல் செய்து வரவு செலவுகளை நான் தான் கவனித்து வந்தேன் என்றால் இல்லை. கணவன் மனைவிக்குள் பிரச்சினை ஏற்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகு மேற்படி தொகைகளை நான் அபகரித்து என் வசம் வைத்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. 2வது முறை என் மனைவிக்கு இரட்டை குழந்தைகள் பிறந்தன. மேற்படி பிரசவம் கர்நாடகாவில் வைத்து நடைபெற்றது. எங்கள் சமூக வழக்கப்படி 2வது பிரசவம் எங்கள் வீட்டில் வைத்து நடைபெறுவது வழக்கம் என்றால் சரிதான். கர்நாடகாவில் 2வது பிரசவம் நடைபெற்றபோது நான் உடன் இருந்தேன். நான் அவ்வாறு 35 நாட்கள் இருந்தேன். எந்த மருத்துவமனையில் குழந்தை பிறந்தது என்றால் கே.சி.எம். மருத்துவமனை. குழந்தை பிறந்த பிறகு குழந்தைகளையும் மனுதாரரையும் நான் சென்று அழைத்து வந்தேன். மேற்படி விபரத்தை எனது எதிர்மனுவில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். 2வது பிரசவத்தில் பிறந்த இரட்டை குழந்தைகளில் ஒரு ஆண் குழந்தை ஒரு பெண் குழந்தையாகும். நான் மனுதாரரையும் குழந்தைகளையும் சரிவர பராமரிக்காமல் வெளியூர் சென்றுவிட்டு திரும்பி வரும்போது மது அருந்தி மனுதாரரை கொடுமைபடுத்துவேன் என்றால் சரியல்ல. 2வது பிரசவத்திலும் பெண் குழந்தை பிறந்தால் நான் பெண் குழந்தையை கொன்றுவிடுவேன் என்ற காரணத்தினால் மனுதாரரை அவரது பெற்றோர் 2வது பிரசவத்திற்காக கர்நாடகாவிற்கு அழைத்து சென்றார்கள் என்றால் சரியல்ல. முதல் குழந்தைக்கு எத்தனை நாட்கள் கழித்து காதணி விழா வைத்தோம் என்றால் 2வது

குழந்தைகள் பிறந்து ஒன்னரை வருடம் கழித்து காதணி விழா வைத்தோம். காதணி விழாவிற்கு உறவினர்கள் மொய் செய்தார்கள் என்றால் சரிதான். தாய்மாமன் என்ற முறையில் மனுதாரரின் சகோதரர் மற்றும் பெற்றோர்கள் செய்தார்கள் என்றால் பெற்றோர்கள் செய்தார்கள் சகோதரர்கள் செய்யவில்லை. அவ்வாறு மனுதாரரின் பெற்றோர்கள் ரூபாய் 1,20,000/- மொய் செய்தார்கள். அதைதவிர 2 கிராம் தோடு செய்தார்கள். மொத்த மொய் பணம் 6,33,000/-. மேற்படி மொய் பணத்தை நான் கொடுக்கல் வாங்கல் செய்துகொண்டேன் என்றால் இல்லை. ரூபாய் 2 லட்சம் செலவு போக மீதி 4 லட்சம் ரூபாய் பணத்தை வங்கியில் போட்டுவைத்தேன். மனுதாரருக்கு சொந்தமான நகைகளை அடமானம் வைத்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கு தாக்கல் செய்த அடுத்த நாள் நான் வங்கியில் போடப்பட்டிருந்த ரூபாய் 4 லட்சம் பணத்தை எடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்து 25 நாட்கள் கழித்து கடன்காரர்கள் வந்து பிரச்சினை செய்த காரணத்தினால் நான் வங்கியிலிருந்து பணத்தை எடுத்தேன். மனுதாரர் நிலக்கோட்டையில் உள்ள திண்டுக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கு அனுப்பி அறிவிப்பிற்கு மேற்படி வங்கி மூலம் வந்த பதில் அறிவிப்பில் நான் மேற்படி தொகையை இந்த வழக்கு தாக்கல் செய்த அடுத்த நாளே பெற்று சென்றுவிட்டேன் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 11.01.2017 ஆம் தேதி அன்று திரும்ப பெற்று சென்றுவிட்டேன். நான் திண்டுக்கல் மத்திய கூட்டுறவு வங்கியில் இரண்டு நகைகளை அடமானம் வைத்துள்ளேன் என்றால் மேற்படி நகைகள் என் அக்காவுக்கு சொந்தமான நகைகள் ஆகும். மேற்படி நகைகளும் 11.01.2017 ஆம் தேதியன்று திருப்பப்பட்டது என்றால் சரிதான். மேற்படி நகைகளை அடமானம் வைத்ததற்கான அசல் ரசீதை தாக்கல் செய்யாமல் நகைகளை திருப்பினேன் என்றால் அசல் ரசீதுகள் மனுதாரர் வசம் இருந்த காரணத்தினால் நகல் ரசீதை கொடுத்து நகைகளை திருப்பினேன். என் அக்காவின் நகைகளை என் தேவைக்காக நான் அடமானம் வைத்தேன். 21.04.2016 ஆம் தேதி நகைகளை அடகு வைத்தேன் என்றால் சரிதான். 07.11.2016 ஆம் தேதி பணம் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தேவைக்காக நகைகளை அடமானம் வைத்த பிறகு 6 மாதங்கள் கழித்து பணம் வைப்பீடு செய்துள்ள காரணத்தினால் நான் தேவைக்காக நகைகளை அடமானம் வைத்தேன் என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. காதணி விழா 6 ஆண்டுகளுக்கு முன்பு வைத்தேன். 09.09.2013 ஆம் தேதி என்றால் சரிதான். 2013 ஆம் ஆண்டு ரூபாய் 4 லட்சத்தை வங்கியில் வைப்பீடு செய்யவில்லை என்றும் 2015 ஆம் ஆண்டு தான் வைப்பீடு செய்துள்ளேன் என்றும் இடைப்பட்ட காலத்தில் மேற்படி பணத்தை நான் வட்டிக்கு விட்டு வரவு செலவு வைத்திருந்தேன் என்றால் சரியல்ல. மேற்படி 2 ஆண்டு காலம் ரூபாய் 4 லட்சம் பணத்தை என் வீட்டில் தான் வைத்திருந்தேன். விசேசம் வைத்தவுடன் வங்கியில் பணத்தை வைப்பீடு செய்யாமல் இரண்டு ஆண்டு காலம் கழித்து தான் வைப்பீடு செய்தேன் என முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது 3 குழந்தைகளின் பிறந்த தேதி

தெரியுமா என்றால் எனக்கு ஞாபகமில்லை. என்னுடைய கடனை பற்றியோ நகை அடமானம் வைத்தது பற்றியோ வங்கியில் வைப்பீடு வைத்த பணத்தை பற்றியோ திருப்பி பணத்தை எடுத்ததை பற்றியோ எனது பதிலுரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். நான் அவ்வாறு எனது பதிலுரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. மொய் மூலம் வந்த பணமும் உழைப்பின் மூலம் சம்பாதித்த பணம் ஆக மொத்தம் 9 லட்சம் பணத்தில் வைப்பீடு செய்த பணம் போக மீதமுள்ள 5 லட்சம் ரூபாயை நான் கொடுக்கல் வாங்கல் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு கடவுள் நம்பிக்கையுண்டு. திருமணத்திற்கு முன்பு ஜாதகம் பார்த்தோமா என்றால் இல்லை. பெயர் ராசி பார்த்தோம். மனுதாரார் ஜாதகத்தை பார்த்தோமா என்றால் பார்த்தோம் அதில் மனுதாரருக்கு செவ்வாய் தோசம் இருந்தது என்றால் இல்லை. பொதுவாக ஜாதகம் பிறப்பின் தேதி மற்றும் நேரத்தை வைத்து கணிப்பார்கள் என்றால் சரிதான். மனுதாரர் ஜாதகத்தில் அவரது பிறந்த தேதி மற்றும் நேரம் குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் அது பற்றி எனக்கு ஞாபகமில்லை. திருமணத்திற்கு முன்பு மனுதாரரை பெண் பார்க்க நான் கர்நாடகா சென்றேன். மனுதாரரின் சித்தப்பாவுடன் சென்றேன். அந்த சமயத்தில் மனுதாரர் படித்துக்கொண்டிருந்தாரா என்றால் இல்லை வீட்டில் தான் இருந்தார். மனுதாரர் என்ன படித்துள்ளார் என்றால் அவரது குடும்பத்தார் அவர் 5 ஆம் வகுப்புவரை படித்துள்ளதாக சொன்னார்கள். மனுதாரருக்கு தமிழ் எழுத படிக்க தெரியாது என்றால் சரிதான். நான் பெண் கேட்டு சென்ற சமயத்தில் மனுதாரர் படிப்பை நிறுத்தி சுமார் 7, 8 ஆண்டுகள் இருக்குமென்று சொன்னார்கள். மனுதாரருக்கு பிறந்த நாள் கொண்டாடியிருக்கிறீர்களா என்றால் இல்லை. எனக்கு பிறந்த நாள் கொண்டாடியிருக்கிறீர்களா என்றால் இல்லை. என்னுடைய எதிர்மனுவில் மனுதாரருக்கு 15 வயதில் எனக்கு திருமணம் முடித்துவிட்டார்கள் என தெரிந்து நான் அதிர்ச்சியடைந்தேன் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் திருமணம் சமயத்தில் மனுதாரரின் வயதை அவருடைய ஜாதகம் மூலம் தெரிந்து கொண்டு தான் திருமணம் செய்தேன் என்றும் எனவே திருமணத்தின்போது மனுதாரரின் வயது 15 என எனக்கு தெரிந்து தான் திருமணம் செய்துகொண்டேன் என்றால் சரியல்ல. அவ்வாறு திருமணத்தின்போது மனுதாரரின் வயது 15 என தெரிந்த பிறகு அது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை நீதிமன்றத்தில் தெரிவித்தேன். மனுதாரருக்கு 15 வயதில் திருமணம் நடைபெற்ற காரணத்தினால் எங்கள் திருமணம் செல்லாத திருமணம் என்றும் அதன் அடிப்படையில் மனுதாரர் ஜீவனாம்சம் மற்றும் பிற சலுகைகளை கோரமுடியாது என எனது பதிலுரையில் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. கடன் வாங்கி மனுதாரரின் பெற்றோர்களுக்கு சொந்தமான தோட்டத்தில் போர்வெல் போட்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(மனுதாரர் வழக்கறிஞர் கோரிக்கையின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.)